| Headline | 26,112 smart meters until January 24 at Melaka | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 22 Aug 2018 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 2 |
| ArticleSize | 95 cm² | Journalist | NULL |
| PR Value | RM 829 | | |
| | | | |



# மலாக்காவில்

## ஜனவரி 24 வரை 26,112 விவேக மீட்டர்

(அ.கவிஅரசன்)

மலாக்கா, ஆக. 22-

கடந்த ஜனவரி 24 வரை மலாக்கா மாநிலத்திலுள்ள பெரும் பாலான பகுதிகளில் சுமார் 26,112 விவேக மீட்டர்கள் வீட்டின் முன்புறங்களில் பாதுகாப்பாக பொருத்தப்பட்டுள்ளன.

தெனாகா நேஷனல் நிறுவனத்தின் மற்றுமொரு சிறப்புச் சலுகையான இந்த விவேக மீட்டர் இலவசமாக பொருத்தப்படுவதால் அதிகளவிலான பொதுமக்களின் வரவேற்பை பெற்று வருகின்றது.

மெர்லிமாவ், ஜாசின், எம்.ஐ.டி.சி மற்றும் அலோர்காஜா பகுதிகளில் தத்தம் வீட்டின் உரிமையாளர்களின் அனுமதியுடன் இந்த விவேக மீட்டர் சேவை தொடரப்படுகின்றது.

இந்த சேவை இன்னும் 310,000 வீடுகளில் பொருத்தப்பட வேண்டியுள்ளதாக தெனாகா நேஷனல் தெரிவித்தது.

Powered by: iSENTIA